# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

## பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம்

## குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் பொதுச்சந்தைகள், மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பன 2025ஆம் ஆண்டிற்கு (01.01.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : 28.10.2024 – 11.11.2024 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : 11.11.2024 பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 11.11.2024 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் **11.11.2024** ஆம் திகதி பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **31,000.00** |
| 2 | அச்சுவேலி பொதுச்சந்தை | - | 1,000.00 | 200,000.00 | **10,965,000.00** |
| 3 | அச்சுவேலி பொதுச்சந்தையின் உட்புற வாகன தரிப்பிடம் | - | 1,000.00 | 25,000.00 | **1,284,000.00** |
| 4 | அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 50,000.00 | **2,431,000.00** |
| 5 | அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,322,000.00** |
| 6 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **255,000.00** |
| 7 | வளலாய் கோழி இறைச்சிக்கடை புதிய கட்டிடம் | 1,600.00 | 1,000.00 | 10,000.00 | **330,000.00** |
| 8 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை புதிய கட்டிடம் | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **165,000.00** |
| | **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடங்கள்) | | | | |
| 9 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | **4,373,000.00** |
| 10 | புத்தூர் பொதுச்சந்தை | - | 1,000.00 | 20,000.00 | **943,000.00** |
| 11 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **1,070,000.00** |
| 12 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **66,000.00** |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 13 | கோப்பாய் மீன்சந்தை | - | 1,000.00 | 10,000.00 | **415,000.00** |
| 14 | கோப்பாய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 100,000.00 | **6,160,000.00** |
| 15 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **572,000.00** |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | | | |
| 16 | உரும்பிராய் மாட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 80,000.00 | **4,645,000.00** |
| 17 | உரும்பிராய் மத்திய சந்தை | 2,250.00 | 1,000.00 | 30,000.00 | **1,627,000.00** |
| 18 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **789,000.00** |
| 19 | உரும்பிராய் ஆட்டிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 5,000.00 | **31,000.00** |

01 சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், இறைச்சி, மரக்கறி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

02 கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வங்கிக்கணக்கு புத்தகப்பிரதியையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03 கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.

04 உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

05 ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

06 கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

07 சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்களால் உற்பத்தியாளர்களினால் கொண்டு வரப்படும் உற்பத்திப்பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படல் வேண்டும். பொதுச்சந்தையில் கழிவு நடைமுறை, தரகுக்கட்டண அறவீடு என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

08 கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.

09 வாகனத்தரிப்பிடம் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக எதனையும் அறவிடக்கூடாது.

10 சபையின் அச்சுவேலி கொல்களத்தில் அல்லது சபையினால் அனுமதி வழங்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடுகளை அறுப்பதற்கு அனுமதி வழங்கப்படும்.

11 கடைகளில் இறைச்சிகளின் விலைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.10.26